PW1: சக்திவேல் ராஜா த/பெ.ராமசாமி ராஜா

வாதி திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

18.06.2001 தேதி பிரதிவாதி இந்தியன் ஆயில் கார்ப்ரேசனுக்கு வழக்கிடை சொத்தின் முன் உரிமையாளர்களுக்கும் இடையில் வழக்கிடைச் சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தின் கணினி நகல் வா.சா.ஆ.*1.* வழக்கிடை சொத்தை இந்த வாதிகள் கிரையம் பெற்றதை காட்டக்கூடிய பதிவு செய்யப்பட்ட கிரையச்சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.*2.* வாதிகள் *1*ம் வாதியின் பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ள கணக்கு பட்டியல் *(01.09.2014* முதல் *06.12.2018* வரை*)* கணினி நகல் வா.சா.ஆ.*3.* பிரதிவாதிகள் கார்ப்ரேசன் *09.04.2021*ம் தேதியிட்டு அனுப்பிய காசோலை எண்.*167438*ன் ஜெராக்ஸ் *(*இதன் அசல் பிரதிவாதிகளுக்க திருப்பி அனுப்பப்பட்டது*)* வா.சா.ஆ.*4.* பிரதிவாதிகள் *10.04.2021*ம் தேதியிட்டு அனுப்பிய அஞ்சல் உறையின் அசல் வா.சா.ஆ.*5. 22.04.2021*ம் தேதியிட்டு வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய பதிவு தபால் வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.*6. 22.04.2021*ம் தேதி அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை *(2-*எண்ணம்*)* வா.சா.ஆ.*7.* வரிசை *07.05.2021*ம் தேதியிட்டு பிரதிவாதிகள் வாதிகளுக்கு அனுப்பிய காசோலை எண்.*167456* ஜெராக்ஸ் வா.சா.ஆ.*8. (*இதன் அசல் பிரதிவாதிகளுக்க திருப்பி அனுப்பப்பட்டது*)* பிரதிவாதிகளால் *07.05.2021*ம் அனுப்பப்பட்ட காசோலை அஞ்சல் உரை அசல் வா.சா.ஆ.*9. 19.05.2021*ம் தேதியிட்டு வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.*10,* வழக்கறிஞர் அறிவிப்பபை

பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.*11.* வாதிகளிடமிருந்து பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட உறுதிமொழி அபிடவிட் வா.சா.ஆ.*12* (பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது), மேலே சொன்ன வா.சா.ஆ.*12* ஆவணம் சம்பந்தமாக *10.12.2018*ம் தேதியில் வாதிகள் *1*வது பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.*13,* வா.சா.ஆ.*13* ஆவணத்திற்கு *1*ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய *17.12.2018*ம்தேதி அனுப்பிய பதிலறிவிப்பு வா.சா.ஆ.*14.* *23.12.2018*ம் தேதியிட்டு வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.*15.* அதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (*2*-எண்ணம்) வா.சா.ஆ.*16* வரிசை. பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)